**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.31/2024
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : மணிகண்டன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of May 2024.

22.05.2024

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் மயில் டுவீலர் ஒர்க்ஸ்ஷாப்பில் இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் வேலை செய்கிறேன். கடந்த 20.01.2024ம் தேதி கடையில் நான் வழக்கம்போல் வேலை பார்த்து கொண்டிருந்தபோது மதியம் சுமார் 01.00 மணியளவில் கடையின் முன்பாக ஆஜர் எதிரி முனியசாமி மது அருந்திக்கொண்டிருந்தார். நான் அப்போது ஆஜர் எதிரியிடம் கடையின் முன்பாக அமர்ந்து மது அருந்தவேண்டாம் என்று கூறினேன். அதற்கு ஆஜர் எதிரி நீ என்னடா என்னை சொல்வது நீ எப்படி வேலை பார்க்கிறாய் என்று பார்த்துக்கொள்கிறேன் என்று கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டார்.

2) பின்பு அன்றைய தினம் மாலை 06.00 மணியளவில் மீண்டும் ஆஜர் எதிரி கடைக்கு வந்து உன்னை பேசவிட்டால் வேறு யாருக்கும் பயம் இல்லாமல்போய்விடும் என்று கூறி எதிரி கையில் வைத்திருந்த கத்தியை எடுத்து எனது இடதுபக்க தலை, இடதுபக்க கழுத்து, இடதுபக்க தோள்பட்டை ஆகியவற்றில் வெட்டி காயம் ஏற்படுத்திவிட்டு ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். எனது

கடையின் முதலாளி குணசேகரன் என்னை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டு சென்றார். முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் போலிசார் வந்து என்னை விசாரித்து நான் சொல்ல சொல்ல எழுதி புகார் வாக்குமூலம் பெற்று என்னிடம் படித்து காட்டி கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1).** அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர் கற்றறிந்த வழக்கறிஞர் வந்து தான் குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று கூறியதன்பேரில் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.31/2024
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : முத்துக்குமார் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of May 2024.

22.05.2024

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தச்சுதொழில் செய்து வருகிறேன். கடந்த 20.01.2024ம் தேதி மாலை 06.00 மணியளவில் முதுகுளத்தூர் ஆத்துப்பாலம் அருகில் உள்ள கபிலன் டீக்கடைக்கு தேநீர் அருந்த சென்றிருந்தேன். கபிலன் டீக்கடைக்கு அருகில் குணசேகரன் வைத்திருக்கும் இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் கடை உள்ளது. அப்போது ஆஜர் எதிரி முனியசாமிக்கும், அசா.1 மணிகண்டனுக்கும் இடையே தகராறு நடந்தது. நான் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி கத்தியை வைத்து அசா.1ன் கழுத்தில் இடதுபக்கத்தில் கீறிவிட்டார். தடுக்க சென்ற எங்களையும் யாரும் அருகில் வராதீர்கள் வெட்டிவிடுவேன் என்று கூறிவிட்டு ஆஜர் எதிரி ஓடிவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் கற்றறிந்த வழக்கறிஞர் வந்து தான் குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று கூறியதன்பேரில் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.